EASTERN UNIVERSITY, SRI LANKA

FACULTY OF ARTS & CULTURE

1ST YEAR EXTERNAL DEGREE EXAMINATION IN

ARTS & CULTURE -2010/11 (June/July 2013)

CC 104 – MANAGEMENT STUDIES

23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

Answer all questions. Time: 3.00 hours

பின்வரும் விடயக்கலை ஆய்வை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக

**ART (Pvt.) கம்பனி**

ART (Pvt.) கம்பனியானது சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கு கடன்சேகரிப்பு நிதிகளைப் பெறுதல் மற்றும் வியாபார செலவுகளை நிர்ணயித்தல் தொடர்பான நிதியிடலுக்கான மதியுரைகளை வழங்குகின்ற நிறுவனமாகும். இது கடந்த ஒன்றரை வருடங்களில் இதனது கிளைகளை எட்டு தொடக்கம் இருபத்தைந்தாக அதிகரித்திருக்கின்றது. ART (Pvt.) கம்பனியின் பணிப்பாளர்கள் ஒரு புதிய மத்திய காரியாலயத்தினை தமது ஒன்றுகுவிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக அமைக்க திட்டமிட்டுள்ளனர்.

தற்போது ஒவ்வொரு கிளையும் எட்டு தொடக்கம் பத்து மதியுரையாளர்களைக் கொண்டுள்ளன. இவை விசேடமாக புவியியல் ரீதியாக எல்லைகளைக் கொண்டுள்ளதுடன் இவற்றுள் மூன்று தொடக்கம் ஐந்து நிர்வாகிகள் விலைப்பட்டியலை தயாரிப்பது, மற்றும் கிளைகளுக்கான சந்தைப் படுத்தல் விளம்பரம் போன்றவற்றை முன்னெடுக்கின்றனர். ART (Pvt.) கம்பனியின் நான்கு பணிப்பாளர்கள் மேல்மாகாணத்தில் உள்ள கிளைகளில் இருக்கின்றனர். அங்குதான் வியாபாரம் ஆரப்பிக்கப்பட்டது. அவர்கள் எதிர்காலத்தில் இந்த வியாபாரத்தை கட்டமைப்பதற்கு பல்வேறு தேர்வுகளைக் கொண்டிருந்தனர். அத்துடன் அதனை ஒரு தொழிற்பாட்டு அமைப்பாக அதாவது கதைத்து தேவையான ஆதரவுடன் அமைப்புடன் கூடியதாக புதிய மத்திய காரியாலயத்தை தீர்மானித்தனர். இந்த அணுகுமுறையானது மதியுரையாளர்களுள் தமது வாடிக்கையாளர்களுக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை அளிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது.

எவ்வாறாயினும், ஒவ்வொரு பணிப்பாளர்களும் பகுதிகளைப் பற்றியும் அல்லது ஒரு வியாபாரத்தின் அளவிற்கு அதனுடைய திணைக்களம் தேவை பற்றியும். வித்தியாசமான சிந்தனைகளைக் கொண்டிருந்தனர்.

அத்துடன் இன்னும் 12 மாதங்களில் இவ் வியாபாரத்தின் கலவையை மேலும் 60% விருத்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்தனர். செல்வி ரந்திகா டி சில்வா கடந்த மூன்று வருடங்களாக மதியுரையாளராக கடமையாற்றி ஒருவருடத்திற்கு முன்னாள்

பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் ஒரு கருத்தை வெளிட்டார். அதாவது மீள்கட்டமைப்பின் ஒரு பகுதியாக மதியுரையாளர்கள் கிளைக் காரியாலயங்களில் வேலையாற்றுவதற்கு பதிலாக மனைகளிலிருந்து வேலையாற்ற வேண்டும். அவளுடைய பின்னிலை பணிப்பாளர் இத் தீர்மானத்தின் மீது விருப்பம் கொண்டிருந்தனர். இவர் இன்னுமொன்றையும் உத்தேசித்தார். அதாவது மத்திய காரியாலயத்தில் தொழிற்பாட்டு குழுவானது தனிப்பட்ட காரியாலயத்திற்கு வேலை செய்யாது திறந்த அடிப்படையில் சேவையாற்ற வேண்டும் என்பதாகும். அவர் இதன்மூலம் தொழிற்பாட்டு மட்டங்களுக்கிடையில் தொடர்பாடல், குழுத்திர்மானமெடுத்தலை ஊக்குவிக்கும் என நம்பினார். எனினும் திரு, திருமதி டி சில்வா கம்பனியில் நிதியிட்ட பணிப்பாளர்களாக கடமைபுரிகின்றனர். இவர்கள் மரபு ரீதியாக சபாவில் மேற்கொள்ளப்படும் தீர்மானமெடுத்தலின் முழு அதிகாரத்தையும் குவித்துக்கொள்ள விரும்பினர்.

நீர் ஒரு முகாமை ஆலோசகர் என்றவகையில், இயக்குனர்கள் உம்மிடம் பின்வரும் சவால்களுக்கு மதியுரைகளை வேண்டி நிற்கின்றனர்.

1) நிறுவனத்தின் அளவு, வளர்ச்சி திட்டம் மற்றும் இயல்பு என்பனவற்றை கருத்தில் கொண்டு மீள் கட்டமைப்பின் நன்மைகளை குறிப்பிடுக. அத்துடன் என்ன பகுதிகள்/ திணைக்களங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றீர்கள் என்பதையும் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

2) மத்திய நிலையத்தில் உள்ள புதிய தொழிற்பாட்டு குழுக்கள் தனித்தவொரு காரியாலயத்திற்கு அன்றி அனைத்திற்குமாக திறந்தளவில் செயற்பட வேண்டும். மேலுள்ள சிபார்சினை விவாதிக்குக. இக் கூற்றை நீர் ஏற்கின்றீரா இல்லையா? காரணம் தருக?

(08 புள்ளிகள்)

3) "வீட்டிலிருந்து வேலை செய்தல்" என உத்தேசிக்கப்பட்ட முறையின் நன்மை தீமைகளை நிறுவனத்தினதும் மதியுரையாளர்களினதும் கோணங்களில் இருந்து ஆராய்க.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

LIBRARY 23 AUG 2013 UNIVERSITY, SRI LANKA

02. a) முகாமையாளர் குறிப்பிட்ட நிலைமையினை ஆராய்ந்து அந்நிலைமைக்கு ஏற்ப பொருத்தமான திட்டங்களை வகுப்பதற்கு தேவையான அற்றல்களையும் தேர்ச்சித் திறன்களையும் கொண்டிருக்க வேண்டும்.

மேற் கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முகாமைத்துவம் என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறி முகாமைத்துவ தொழிற்பாடுகள் எவ்வாறு ஓர் நிறுவனத்தின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்கின்றது என்பதை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

b) ஹென்றி பயோலின் 14 முகாமைத்துவம் தொடர்பான தத்துவங்களை அடையாளம் கண்டு இத் தத்துவங்கள் எவ்வாறு நிறுவன வெற்றிக்கு பங்களிப்பு செய்கின்றன என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

c) தீர்மானம் எடுத்தல் எனப்படுவது பல மாற்றுவழிகளில் இருந்து ஒரு மாற்றுவழியினைத் தெரிவு செய்தலைக் குறிக்கின்றது.

தீர்மானம் எடுத்தல் தொடர்பான செயற்பாட்டின் பிரதான படிகளைக விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. a) “ஓர் நிறுவணத்திற்காண சூழல் காரணிகள் அந்நிறுவணத்திற்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம், இத்தகைய சூழல் காரணிகளின் நிலமைினை ஆய்வு செய்வதற்கு SWOT ஆய்வு பயன்படுத்தப்படுகின்றது.”

மேற் கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் SWOT ஆய்வினையும் அதனை பயன்படுத்துவதால் நிறுவனம் பெறக்கூடிய பயன்களையும் விளக்குக.

(08 புள்ளிகள்)

b) நிறுவானத்தின் கட்டமைப்பில் செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகளை அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

c) நிறுவனங்கள் பொதுவாக தமக்குத் தேவையான ஊளியர்களை தெ செய்வதற்கு மேற்கொள்ளும் பல்வேறுபட்ட தெரிவு முறைகளை அடைய கண்டு விளக்குக.

(06 புள்ளி

(மொத்தம் 20 புள்ளி

04. a) திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முகாமைத் செயற்பாடுகளாகும். கட்டுப்படுத்தல் எனப்படுவது, திட்டமிட்டபடி கருமங் மேற்கொள்ளப்படுகின்றதா என உறுதிப்படுத்தி கொள்வதனைக் குறிக் இக்கட்டுப்படுத்தலானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல படிமுறைகளை கொண்டுள்ளது.

இக்கூற்றின் அடிப்படையில் கட்டுப்படுத்தல் செயல் முறையில் காணப்ப பிரதான படிமுறைகளை விளக்குக.

(06 புள்ளிக

b) கட்டுப்படுத்தல் செயற்பாட்டின் முக்கியத்துவத்தை சருக்கமாக விளக்குக.

(05 புள்ளிக

c) சிறந்த கட்டுப்பாட்டு செய்முறை கொணடிருக்க வேண்டிய அம்சங்களை பட்டியலிட்டு விளக்குக.

(09 புள்ளிக

(மொத்தம் 20 புள்ளிக

05 a) ஆபிரகாம் H. மாஸ்லோவின் படிமுறை அமைப்பு தேவைக்கேட்பாட்டினை விளக்கப்படத்தின உதவியுடன் பொருத்தமான உதாரணங்கள் தந் விளக்குக

(08 புள்ளிக

b) ஊழியர்களை ஊக்கப்படுத்தல் தொடர்பான முகாமைத்து தந்திரோபாயங்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்

c) சிறந்த ஊக்கப்படுத்தல் செய்முறை கொண்டிருக்க வேண்டிய அம்சங்களை விளக்குக

(06 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்